தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 — சித்திரை 6

2010 ஏப்ரல் 19, திங்கட்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்."

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

1. வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்துக் கொண்டு வந்த அரசினர் தீர்மானம் தேவையில்லையென மாண்புமிகு முதலமைச்சரின் வேண்டுகோள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று (19-4-2010) வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ இன்று (19-04-2010) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) கேட்டுக்கொள்ளுங்கள். நேரத்தின் அருமை கருதி ஒருமனதாகத்தான் இதை நிறைவேற்றவேண்டும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பதற்கு முன்னால் அனைவருடைய ஒப்புதல் பெற்றுத்தான் ஒத்திவைக்கவேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இருக்கின்ற எங்கள் யாரிடத்திலும், நீங்கள் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பதைப் பற்றிக் கேட்கவில்லை. ஆகவே கேள்வி நேரத்தை ஒத்தி வைப்பதை நாங்கள் எதிர்க்கின்றோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், in fact நானே உங்களுடன் தொலைபேசிமூலம் இதுகுறித்துப் பேச முயற்சி செய்தேன். திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுடனும் பேச முயற்சி செய்தேன். இரண்டு பேருமே தொலைபேசியை switch off செய்து வைத்திருந்தீர்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் திரு. சண்முகவேலு அவர்களிடம் கேளுங்கள். அப்பொழுது உங்கள் உறுப்பினர் திரு. சண்முகவேலு அவர்களும்கூட இருந்தார், கேளுங்கள் (குறுக்கீடுகள்).

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எங்களில் யாரேனும் ஒருவரது knowledge வேண்டும். கட்சியின் சார்பாக நீங்கள் எங்களிடம் கேட்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய எதிர்ப்புப்படியே, இன்றைக்கு அவையில் கேள்வி நேரம் ஒத்திவைக்கப்படத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.